**பீப்பிள்ஸ் டிரவல்ஸ் பிறைவேட் லிமிட்டட் -2020/2021**

**1.1 அபிப்பிராயம்**

பீப்பிள்ஸ் டிரவல்ஸ் பிறைவேட் லிமிட்டட்டின் (“கம்பனி”) 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனியின் 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொத்த வியாபார கடன்பட்டோரிடமிருந்து ரூபா 14,135,487 அல்லது 89 சதவீதமான கடன்பட்டோர் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. கம்பனி 15 நாட்களிற்கான கடன் கொள்கையை கொண்டிருந்த போதிலும் ரூபா 15,695,432 (வியாபார கடன்பட்டோர்) 01 ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் முகாமைத்துவ கடிதத் திகதியில் உள்ளவாறு நிலுவை மீதியை கம்பனியால் அறவிட முடியாதிருந்தது. மேலும் பதவியணி கடன்பட்டோர் மீதி 2022.03.31 இல் உள்ளவாறு ரூபா 721,655 (மொத்த பதவியணி கடன்பட்டோரின் 99 சதவீதம்) தொகையை | குறித்துக்கொள்ளப்பட்டது. தற்போது சுட்டிக்காட்டப்பட்ட கடன்பட்டோரில் பெரும்பாலானவை ஏற்கனவே அறவிடப்பட்டுள்ளது. தற்போதைய தொற்றுநோய் நிலைமை காரணமாக சில பெறவேண்டியவைகள் இன்னும் நிலுவையாக உள்ளன. நிலைமை இயல்பு நிலைக்குத் திரும்பியதும், அவை தீர்க்கப்படும், மேலும் பணம் செலுத்துவதற்கான எழுத்துமூல நினைவூட்டல்களுக்கான பதில்களைப் பெறுவது அரிது. எனவே, நாங்கள் சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து, கொடுப்பனவுகளைப் பின்தொடர்கிறோம். | மீதியின் அறவீட்டை உறுதிப்படுத்துவதற்கு பின்தொடர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துமாறு கம்பனிக்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இது 360 நாட்களுக்கு மேல் உள்ளதுடன் சரியான கால எல்லையினுள் அப் பெறவேண்டிய மீதியை கம்பனியால் சேகரிக்க முடியாதிருந்தது.

**1.6 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி கடந்த ஆண்டு முதல் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ரூபா 453,695 செலுத்த வேண்டிய VAT மீதியை கொண்டுள்ளது. | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் இது கவனத்தில் கொள்ளப்பட்டு கண்டிப்பாக பின்பற்றப்படும். | தீர்ப்பதற்கு இந்த மீதியை பின்தொடர்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 23,212,868 தொகையான நட்டமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 7,261,060 தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி நட்டத்தில் ரூபா 15,951,808 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. சர்வதேச வர்த்தகம் மற்றும் பயணத்தில் கொவிட் -19 இன் பாதகமான தாக்கம் காரணமாக வருமானம் ரூபா 118,841,883 ஆல் அல்லது 98 சதவீதத்தால் குறைவடைந்தமை இவ் வீழ்ச்சிக்கான காரணமாகும்.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

**2.2.1** மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் கம்பனியின் நிதி விளைவுகளை பின்வரும் அட்டவணை சுருக்கமாகக் குறிப்பிடுகிறது.

| விபரம் | 2021 | 2020 | வேறுபாட்டு தொகை அதிகரிப்பு/ (வீழ்ச்சி) ரூபா | வேறுபாடு % | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| <u>வருமானம்</u> | | | | | |
| தம்பதிவ /இந்திய சுற்றுப்பயணங்கள் மூலமான வருமானம் | 26,098 | 17,959,184 | (17,933,086) | (99.85) | சர்வதேச வர்த்தகம் மற்றும் பயணத்தில் கொவிட் -19 இன் பாதகமான தாக்கம். இந்த காலப்பகுதியில் முழு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வருமானம் கம்பனிக்கு இழக்கப்பட்டுள்ளது. |
| ஏனைய ஓய்வு நேர சுற்றுப்பயணங்கள் மூலமான வருமானம் | - | 83,197,910 | (83,197,910) | (100) | |
| விமான பயணச்சீட்டு மீதான தேறிய வருமான தரகு | 1,151,808 | 15,760,739 | (14,608,931) | (92.69) | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விசா மீதான தேறிய தரகு | 12,409 | 732,259 | (719,850) | (98.31) | |
| **<u>செலவினங்கள்</u>** | | | | | |
| தம்பதிவ /இந்திய சுற்றுப்பயணங்களின் விற்பனை கிரயம் | - | 14,539,780 | 14,539,780 | (100.00) | சர்வதேச வர்த்தகம் மற்றும் பயணத்தில் கொவிட் -19 இன் பாதகமான தாக்கம். இந்த காலப்பகுதியில் முழு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வருமானம் கம்பனிக்கு இழக்கப்பட்டுள்ளது. |
| ஓய்வுநேர சுற்றுப்பயணங்களின் விற்பனை கிரயம் | - | 73,974,295 | (73,974,295) | (100.00) | |
| விநியோக செலவினங்கள் | 139,284 | 8,499,774 | (8,360,490) | (98.36) | |
| நிர்வாக செலவினங்கள் | 24,949,30 | 36,508,503 | (11,559,197) | (31.66) | |
| நிதி கிரயம் | 1,147,361 | 1,767,244 | (619,883) | -35.08% | |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமான செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவு சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| முக்கிய விகிதங்கள் | 2021 | 2020 |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை | -1451.21% | -6.15% |
| தேறிய இலாப எல்லை | -1862.30% | -6.05% |
| உரிமை மீதான திரும்பல் | -36.76% | -8.40% |
| சொத்து மீதான திரும்பல் | -28.17% | -6.42% |
| நடைமுறை விகிதம் | 3.20 | 3.61 |
| கடன் விகிதம் | 0.23 | 0.19 |
| மூலதனத்திற்கான கடன் விகிதம் | 0.30 | 0.31 |